உ

கடவுள் துணை

# செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௫௧.] மன்மத௵—வைகாசி௴ [பகுதி-௭.

Vol. 51. May-June—1955. No. 7.

## உள்ளுறை

மதுரைத் தமிழ்ச் சங்கம்: 193
கி. பழநியப்பன்

அறுவடையில் நிலவும் அருள்: 197
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

சாக்கைக் கூத்து: 202
டாக்டர். மா. இராசமாணிக்கனார்

தமிழ்த்தாய் தந்த செய்தி: 207
இரா. சசிவர்ணம்

வாணிக மந்திரம்: 211
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

திருவள்ளுவர்கால இல்வாழ்வும் துறவும்: 218
வித்துவான் சு. குமாரஸ்வாமி ஆச்சாரி

மதிப்புரை: 222

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1955.

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை
தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செக்காவலர், ஆ. கார்மேகக்கோனர், மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனர் M. A. M. O. L. L. T Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-௫௧.] மன்மத-ஹு வைகாசி—மீ [பகுதி-௭.

Vol. 51. May-June—1955. No. 7.

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(கி. பழநியப்பன்)

தமிழ் என்றால் மதுரை. மதுரை என்றால் தமிழ். இவ்விரண்டும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாத நிலையில் உள்ளன. பன்னெடுங் காலமாக மதுரையைத் தமிழ் போற்றி வளர்த்து வந்துள்ளது; தமிழை மதுரை போற்றி வளர்த்து வந்துள்ளது. பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்துத் தமிழைப் போற்றினர். இறைவனே அச் சங்கத்திற்குத் தலைமை தாங்கி, புலவர் பெருமக்களுடன் தமிழின் இனிமையைப் பருகி வந்தானெனில், அச் சங்கத்தின் பெருமைக்கு நாம் வேறு சான்றுகளைக் காட்ட வேண்டுமோ?

முதற்சங்கம் 4440 ஆண்டுகள் செயலாற்றியது. சிவபெருமான் முருகன் அகத்தியர் உட்பட 4449 புலவர்கள் அச் சங்கத்தில் இருந்தனர். தமிழின் இனிமையைக் கேள்வியுற்ற கடல் பொங்கி எழுந்து வந்து மதுரையையும், தமிழ்ச் சங்கத்தையும் விழுங்கியது. 89 பாண்டிய மன்னர்கள் வளர்த்து வந்த முதற்சங்கம் இவ்வாறு கடலால் கொள்ளப்பட்டு மறைந்தது.

இரண்டாவது சங்கம் 3700 ஆண்டுகள் 449 புலவர்களைக்கொண்டு கபாடபுரத்தில் இருந்து வந்தது. தமிழ்த் தாகம் தீராத இரண்டாம் சங்கத்தையும் கடல் விழுங்கியது.

பின் மூன்றாவது சங்கம் தோன்றியது. அதை 49 புலவர்கள் 1850 ஆண்டுகள் நடத்தி வந்தனர். அஞ்சா நெஞ்சம் படைத்த நக்கீரர் அதனை தலைவராக விளங்கினார். மூன்றாம்சங்கத்தின் மறைவிற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

"தமிழ்ச் சங்கம்" என்ற புகழை மதுரைக்கு உண்டாக்கிய பெருமை இம் மூன்று சங்கங்களுக்கே உரியது. ஆராய்ச்சியாளர்கள் நான்காவது சங்கம் ஒன்றும் ஐந்தாவது சங்கம் ஒன்றும் இருந்ததாகக் கூறுகின்றனர். கி. பி. 600 முதல் கி. பி. 750 வரை 4வது சங்கம் இருந்து வந்ததாகவும் அதைப் பெருந்தேவனாரும், காலடியார் பாடிய புலவர்களும் நடத்திவந்தனரென்றும் கூறுவர்.

பொய்யாமொழிப் புலவர் முயற்சியால் திருத்தக்க தேவர் காலத்தில் கி. பி. 900 ஆண்டில் 5வது சங்கம் ஒன்று இருந்து வந்ததாகத் தெரிகிறது; இதற்குச் சரியாக 1000 ஆண்டுகளுக்குப் பின் 1901-ம் ஆண்டு ஆறாவது தமிழ்ச் சங்கம் எனப்படும் இன்றைய தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது.

பாண்டிய மன்னர்களுக்குப் பின் தமிழை வளர்க்க முடிவேந்தர் ஒருவரும் இல்லையே யென்று புலவர்கள் வாடிய பொழுது சேதுபதி மன்னர்கள் இக் குறையைப் போக்க முன் வந்தனர். இதை ஓர் புலவர் அழகாக வருணித்துள்ளார்.

"மூவேந் தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொடெட்டுக்
கோவேந் தருமற்று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்திர தாரு வொத்தான் ரகுநாத செயசிங்கமே"

சேதுபதி மன்னரின் நெருங்கிய உறவினரும் பாலவநத்தம் சமீன்தாருமான பாண்டித்துரைத்தேவரவர்களே இன்றைய தமிழ்ச் சங்கத்தின் தந்தையாராவர். தமிழறிவும் கலையறிவும் மிக வுடைய அப் பெரியார் ஒருசமயம் மதுரைக்கு வந்து அங்கே சிலகாலம் தங்க நேர்ந்தது. தேவருடைய தமிழறிவையும் பேச்சுத் திறனையும் கேள்வியுற்ற மதுரைமக்கள் அவருடைய அரிய சொற்பொழிவுகளைக் கேட்க விரும்பினர். தேவரவர்களும் அதற்கு இசைந்து மதுரை மீனாட்சிகோயில் ஆடிவீதியில் சொற்பொழிவு நிகழ்த்த ஒப்புக்கொண்டார். சொற்பொழிவுக்கான குறிப்புக்களைத் தயாரிப்பதற்கு ஒரு கம்பராமாயணமும் ஒரு திருக்குறளும் தேவரவர்களுக்கு வேண்டியிருந்தன. சொற்பொழிவுக்கு அழைத்த தமிழ் அன்பர்களிடம் அந் நூல்களைக் கேட்டார். அவர்கள் பலரைக் கேட்டனர். புத்தகசாலைகள், பள்ளிகள், கோயில்கள், மடங்கள், புலவர்களின் இல்லங்கள்

எல்லாம் தேடப்பட்டன. எங்கு தேடினும் புத்தகங்கள் கிடைக்க வில்லை: "என்னே! தமிழ் வளர்த்த மதுரையின் நிலை!! திருக்குறள் அரங்கேற்றப்பட்ட இடம் இது தானே? சங்கம் இருந்த ஊர் இது தானே?" என்று மனம் சோர்ந்து மதுரையின் நிலையைக் கண்டு கண் கலங்கினர் பாண்டித்துரைத்தேவர். இப்பெரும் குறை நீங்க மதுரையில் தமிழ்ப்பயிர் வளர்ந்தோங்கச் செய்யவேண்டுமென்று உறுதி கொண்டார். அதுவே இன்று தமிழ்ச்சங்கமாகத் திகழ்கின்றது மதுரையிலே.

1901-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் தேதியன்று மதுரையில் தமிழ்ச் சங்கம் அமைக்கப்பெறும் என்னும் செய்தி நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. தமிழ் நாட்டிலுள்ள புலவர் பெருமக்களெல்லாம் வந்து கூடினர். ஸ்ரீ பாஸ்கரசேதுபதியவர்கள் தமது பரிவாரங்களுடன் வந்திருந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கம் தோன்றியது. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தக சாலை, நூலாராய்ச்சிச் சாலை என மூன்று பிரிவுகளாக அது செயலாற்றத்தொடங்கியது. சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை மாணவர்களுக்கு இலவசமாக முறையாகத் தமிழைக் கற்பித்து, தேர்வுகள் நடத்தி, "பண்டிதர்" என்ற பட்டம் வழங்கி வந்தது. சென்னைப் பல்கலைக் கழகம் வித்துவான் தேர்வுகள் ஏற்படுத்துவதற்குமுன் இப் பண்டித பட்டங்கள் பெற்றவர்களே பள்ளிகளில் தமிழாசிரியர்களாகப்பணியாற்றத் தகுதியுடையவர்களெனக் கருதப்பட்டனர். இன்று தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் பல ஆயிரம் மக்கள் இவ்வாறு பட்டங்கள் பெற்று, தமிழ்ப்பணி ஆற்றிவருகின்றனர்.

பாண்டியன் புத்தக சாலையில் கிடைப்பதற்கரிய பல ஏட்டுச் சுவடிகளும் தமிழ், வடமொழி, ஆங்கிலப் புத்தகங்களும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாதையர் போன்ற ஆராய்ச்சியாளர்கள் பலர் அங்கு வந்து அவைகளைப் பயன் படுத்தியுள்ளனர்.

நூலாராய்ச்சிச் சாலையில் அச்சகம் ஒன்று அமைக்கப்பட்டுத் தமிழ் நூல்கள் பல அச்சிடப்படுகின்றன. "செந்தமிழ்" என்ற திங்கள் வெளியீடு ஒன்றும் அங்கிருந்து வெளிவருகிறது.

பாண்டித்துரைத் தேவருக்குப் பின், நாளடைவில் சங்கத்தின் சேவை மக்கள் விரும்பிய அளவிற்குப் பயன்படாது சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்து, இன்று 'தமிழ்ச் சங்கம் எங்கு உளது?' என்று கேட்கும் நிலைக்கு வந்துவிட்டதென்பதை மதுரை மக்கள் உணர்ந்தனர். மதுரை மீனாட்சி கோயிலில் உள்ள திருவள்ளுவர் கழகத்தில் அவ்வப்பொழுது சொற்பொழிவு நிகழ்த்திய தமிழ்ப்பெரு மக்கள் ஒரு முகமாக இச் சங்கத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்றும், காலப்போக்கிற்கு ஏற்றவாறு செயலாற்றச் செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தி வந்தனர். அதன் பயனாக இன்று சங்கத்தின் உப தலைவரான தமிழவேள் உயர்திரு. பி. டி. இராசனவர்கள் பெரு முயற்சியெடுத்துச் சங்கத்தைப்புதுப்பிப்பதற்கான திட்டமொன்றை வகுத்து வருகின்றனர். பிரான்ஸ் நாட்டிலுள்ள பிரஞ்சு அகடமி போன்று தமிழ்ச்சங்கத்தை அமைப்பதென்று அதற்காக இருபது லட்சம் ரூபாயில் ஒரு திட்டமும் வகுக்கப் பெற்றுளது. இத் திட்டத்தைத் தமிழ் மக்கள் நன்கறிய வேண்டுமென்ற நோக்கத்துடனேயே மதுரையில் "தமிழ்ச் சங்கப்பொன் விழா" எனும் பெரும் தமிழ் விழா ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இப் புதிய திட்டத்தின் குறிக்கோள் என்னவெனில் தமிழ்ச் சங்கம் சாதி, மதம், கட்சி வேறுபாடுகளின்றி, தமிழ் மக்களுக்கு வழிகாட்டியாய் இருக்கவேண்டுமென்பதும், தமிழ் மொழி, தமிழர் வாழ்க்கை, தமிழர் பண்பாடு, தமிழர் கலை, தமிழர் மதம் முதலிய சகல துறைகளிலும் தமிழ்ச் சங்கத்தின் முடிவையே தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைக்கு தமிழ்ச்சங்கத்தை உயர்த்த வேண்டுமென்பதே. தமிழ் நாட்டில் பல துறைகளில் அறிஞர்களாய் விளங்கும் 49 பேர்களைக் கொண்ட ஓர் அறிஞர் குழு அமைப்பதென்பதையும், தமிழ்ச் சங்கச் செயற்குழுவில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரதிநிதித்துவம் கொடுப்பதென்ற திட்டம் வகுக்கப் பெற்றுளது. இலங்கையிலுள்ள தமிழர்களும் இப் பொன் விழாவிற்குத் திரளாக வந்து கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் சார்பாக வேண்டிக் கொள்ளுகிறேன். தமிழ் வாழ்க.

(இலங்கை வானொலியில் 15-5-55ல் நிகழ்த்திய சொற்பொழிவு.)

# அறுவடையில் நிலவும் அருள்

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

சங்ககாலத் தமிழ்மக்கள் வாழ்வில் சிறந்த சில கொள்கைகள் நிலவி யிருந்தன. உயிர்களைக் குறிக்கும்போது மன்னுயிர் என்பது ஒன்று. மன்னுயிர் என்ற தொடர் நிலைபெற்ற உயிர்கள் என்று பொருள் படுவது. உயிர்களை நிலைபெற்ற உயிர்கள் என்பது எற்றுக்கு? உடலோடு கூடி உலகில் வாழும் உயிர்கள் பலவும் ஒரு காலத்தே தோன்றுவதும் ஒரு காலத்தே உடம்பைவிட்டு இறந்து படுவதும் இயற்கை. இதனால் உலகில் உடம்பொடு கூடிவாழும் வாழ்க்கை நிலையற்றது என்பது கொள்கையாயிற்று. உலகியல் வாழ்வு நிலையில்லாதது என்பது யாவரும் தெரிந்த கொள்கை; அதன்கண் கருத்து வேறுபாடு இல்லை. இந்த நிலையில்லாத வாழ்க்கையை யுடைய உயிர் நிலையானது என்ற கொள்கை நமது நாட்டில் மட்டில் நன்கு வேரூன்றியுள்ளது. மேனாட்டவர்பலரிடையே காணப் படாத இக் கொள்கை நமது நாட்டில் சங்க லாலத்தேபே நன்கு நிலை பேறு எய்தியிருக்கிறது. "தோற்றமும் கேடும், காணப்படும் உடம்புக்கே யன்றி உயிர்க்கு இல்லை; உயிர் என்றும் உள்ள நிலைப்பொருள்; அதற்குத் தோற்றமும் கேடும் இல்லை; உலகியற் பொருளையும் உடம்புகளையும் படைப்பதுதான் இறைவன் தொழில்; உயிர்கள் இறைவனால் படைக்கப்படுவன அல்ல; படைக்கப்பட்ட உடம்பில் உயிர்களைப் புகுத்தி வாழச் செய்யும்செயல் இறைவன் புரியும் அருட் செயல்" என்பர். இத்தகைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததனால் பண்டைத் தமிழர் உயிர்களை மன்னுயிர் என வழங்கினர்.

உடம்பில் மன்னி வாழ்க்கை நடத்தும் உயிர்கள், இவ் வுலகில் செய்வன செய்து பெறுவன பெற்று நுகர்வன நுகர்ந்து, நின்ற

வுடம்பு கெடும்போது அதனைவிட்டு நீங்குகின்றன. உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் இதனையே செய்தலால், இந்த உலகும் உலகியற் பொருள்களும் இந்த உயிர்களின் பொருட்டே இறைவனால் ஆக்கப்பட்டன என்பது பழந் தமிழ்க் கொள்கையாய் இருந்து வருகிறது. உயிர்கள் உடம்பிடை நின்று வினைசெய்து பயன் நுகர்தற் பொருட்டே இவ் வுலகு தோன்றியுள்ளதென்ற இக் கொள்கையால் உலக வாழ்வு என்பது உலகில் காணப்படும் உயிர்கள் அனைத்துக்கும் பொது என்ற உண்மை விளக்கம் பெறுகிறது. ஒவ்வோருயிர்க்கும், உலகில் வாழ உரிமையுண்டு என்றும், அந்த உயிருரிமையை விலக்குதற்கு எந்த உயிர்க்கும் உரிமையில்லையென்றும் பழந்தமிழ் வாழ்வு கருதியிருந்தது. அக் காலத்தே வேறு நாடுகளில் வாழ்ந்தோர், “இந்த உலகு மக்களுயிர்க்கென்றே படைக்கப்பட்டது. அதனால் இவ்வுலகில் மக்களுயிர் ஒன்றுக்குத்தான் வாழ வுரிமையுண்டு; பிறவுயிர்களுக்கு அந்த உரிமையில்லை” என்று கருதினர். அதனால் அவர்கள் ஒருபடி முன்னே சென்று, “மக்களுயிரல்லாத பிறவற்றையும் மக்களுக்கென்றே இறைவன் படைத்துள்ளான்; அவற்றைக் கொன்று தின்பது மக்களுயிர்க்கு அறமாம்” என்று பேசவும் எழுதவும் தொடங்கிச் செய்கையிலும் கொணர்ந்துவிட்டனர். தின்றற் பொருட்டுப் பிறவுயிர்களைக் கொல்வதும், அவற்றின் உடம்பைத் தின்பதும் மக்களுயிர்க்கு ஆகாதன வல்ல என்ற கொள்கை அம் மக்களிடையே நிலவி வருவதாயிற்று.

இவ் வுலகவாழ்வு எல்லாவகை உயிர்க்கும் பொது என்பதும், மக்களுயிர் ஒன்றிற்கே உரியது என்பதுமாகிய இருவகைக் கொள்கைகளில் மக்களுயிர் ஒன்றிற்கே இவ் வுலகு உரியதென்பது காலத்தால் முற்பட்டது. எல்லா வுயிர்க்கும் பொது என்ற உண்மை மக்களறிவு திருந்தி வளர்ச்சி யுற்றபோது எய்திய விளக்கம்.

இந்த விளக்கம் அறிஞர் குழுவிலே தோன்றியது முதலில் தென்புலத்தில் என்று கூறலாம். உயிர்க் கொலையும் புலாலுண்டலும் தீயவை என்று கட்டுரைக்கும் நூல்களுள் மிகப் பழமை வாய்ந்தவை

தமிழில்தான் உள்ளன என ஆராய்ச்சியாளர் உரைக்கின்றனர். புத்தரும் சமணரும் தோன்றி இவற்றை எடுத்துரைக்கு முன்பே, இவை தமிழ்ச் சான்றோர்களால் எடுத்துக் கடியப்பட்டன வாதலால், அவ்விரு சமயங்களும் தென்னுட்டில் நிலைபெறத்தக்க வாய்ப்பில்லாது போயின; அதனுல் அவை வேறு நாடுகளுக்குச் சென்று சேர்ந்தன.

சங்ககாலத் தமிழ் வாழ்வில் சான்ருேர் குழுவில் உயிர்க் கொலையும் புலாலுண்டலும் கடியப்பட்டிருந்தன. புலாலுண்போரைப் புலையர் என்பது மரபாக இருந்து வந்தது. ஒரு காலத்தே பார்ப்பார், அரசர் முதலாக வகுக்கப்பெற்ற நான்கு வகுப்பினருள்ளும் புலாலுணவு விலக்கப்படாது இருந்து வந்ததுண்டு. அதுபற்றியே புலாலுணவு எல்லோர்பாலும் பொதுவாகப் பழைய நூல்களில் காணப்படுகிறது. ஆயினும் அக்காலத்தேயே புலாலுணவைக் கடிந்து உயிர்க் கொலையை வெறுத் தொழுகிய சான்ருேர்கள் இருந்திருக்கின்றனர். இவ் விரண்டையும் கடிந்தொழுகிய சான்ருேர்களே அறவோர் என்றும் அந்தணரென்றும் பாராட்டப் பட்டனர். அதுபற்றியே அந்தணரென்பது சாதிப்பெயராகாமல் உயிர்க் கொலையும் ஊனுணவும் கடிந்தொழுகுவதே வாழ்க்கை அறமாகக் கொண்ட அறவோர்க்கு உரிய சிறப்புப் பெயராக வழங்கிற்று. திருவள்ளுவரும் அறவாழ்வை மேற்கொண்ட துறவியரிடையே இவ் விரண்டும் ஆகா என விலக்குவாராய்த் துறவறத்தின் கண்ணே புலாலுணவையும் உயிர்க் கொலையையும் எடுத்தோதி மறுக்கின்ருர்.

இவ்வண்ணம் துறவுநெறிக்கண்நின்ற சான்ருேர்க்கு விதிக்கப் பெற்ற இவ்வறம் நாளடைவில் இல்லிருந்து வாழும் எல்லோரிடையிலும் பரவுவதாயிற்று. சங்ககால எல்லை அதற்குள் கழியாமையின் சங்கநூல்களில் இந்த அறம் இல்வாழ்வில் இடம்பெற்றிருந்த திறம் காணப்படுகிறது. ஊனுணவு, உயிர்க்கொலை என்ற இரண்டனுள் முதற்கண் விலகத் தொடங்கியது உயிர்க்கொலை. போரில் நிகழும்

உயிர்க்கொலையும் அரசர் நீதி செலுத்துமிடத்து நிகழும் உயிர்க் கொலையும் பொருள்துறையாய் நாட்டின் நல்வாழ்வுக்கு அரண் செய்வதாய் அமைந்தமையின் அவற்றைச்சான்றோர் வழுவமைத் துக்கொண்டனர். "கூற்றத்தன்ன மாற்றரு முன்பின் தாக்குரல் கேண்மின் அந்தணாளிர் நான்மறைக்குறித்தன்று அருளாகாமை யின், அறங்குறித்தன்று பொருளாகுதலின்" (புறம். 362) என்று சான்றோர் கூறுவது காண்க.

உயிர்க்கொலையை விலக்கி எவ்வுயிர்க்கும் இவ்வுலகில் வாழ் வாங்கு வாழ உரிமையுண்டென உணர்ந்து பிறவுயிர்களை வாழ்வித்து அவற்றிடையே தாமும் வாழ்தல் வேண்டுமென்ற கொள்கை தமிழ் வாழ்வில் வேரூன்றிப் பரவத்தொடங்கியதனால் சான்றோர் வேந்தர் களை "நீ வாழியர் இவ்வுலகத்தோர்க்கே" என வாழ்த்துவாராயினர். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" எனத் தலைமக்களைப் பாராட் டினர். "தான்வாழ ஏனோர் தனக்கு அடிமையாக எனும் ஊன அறிவு ஒழிக" என வெறுத்துரைத்தனர்.

உயிர்க் கொலையை விலக்கும் இவ்வெள்ளியசெயல் உழவர் விளைபுலத்துக்கும் சென்றது. மருதநிலப்பகுதிகளில் வாழும் வேளாண்பெருமக்கள் தங்கள் நன்செய்களை உழுது நெல்வித்தி விளைப்பது இயற்கை. நெல் வளர்ந்து சிறக்கும் வயல்களில் நீர் இடையறாது நிற்றலின் அவ்வயல்கள் மீனினங்களும் மீனுண்டுவாழும் புள்ளினங்களும் வாழ்தற்கு உரிய இடமாய்விடும். நெல்முற்றிக் கதிர் தலைசாயத் தலைப்பட்டதும் வயலிடை நிற்கும் நீரை உழவர் வடித்து நீக்குவர். வடியுங்கால் வயலிடையே வாழும் மீனினம் பல வும் நீரோடே நீங்கிவிடும். நெல் அறுவடைக்காலத்தில் மீன் முதலிய உயிர் வகைகட்கு இடையூறு உண்டாவதில்லை. நெல் விளைந்து அறுவடைக்குரிய செவ்வி எய்துவது கண்ட வேளாண்மக்கள் வயல் நீரை வடிப்பது ஒருபால் நீரில் வாழும் உயிரினங்கட்கு ஊறுண் டாகாவாறு நலம் செய்யும் சிறப்புப்பணியாக இருப்பது இனிது விளங்கும்.

இஃது ஒருபுறம் இருக்க நெல்லை அறுப்பதற்குச் சில நாட்களை வரையறுத்துக்கொள்ளும் உழவர் வேறொரு நல்ல செயலைச் செய்கின்றனர். நெற்பயிர் வளர்ந்து செம்மாந்திருக்குங்காலத்து மீனுண்ணும் புள்ளினம் சில நெற்பயிரிடையிலும் வயல் வரம்பிலும் கூடு கட்டி வாழ்க்கை நடத்துவதுண்டு. திடீரென உழவர் நெல்லை அறுக்கத்தொடங்குவாராயின் அப்புள்ளினங்கட்குப் பெருந்துன்பமுண்டாகும். அவற்றிடையே உயிர்க்கேடும் உண்டாகும். அதனை விலக்குதற்குச் சங்ககால வேளாண் பெருமக்கள் நெல்முற்றிய வயலைச் சுற்றிப் பம்பை தண்ணுமை முதலிய இசைக்கருவிகளை இசைப்பர். ஒரு சில நாட்கள் இவ்விசை முழக்கம் தொடர்ந்து நடைபெறக்காணின் வயல்களை வாழிடமாகக்கொண்ட புள்ளினம் அவ்வயல்களைவிட்டு நீங்கிவிடும். எஞ்சிநிற்கும் ஒரு சில புள்ளினமும் நீங்கும்பொருட்டு நெல் அறுவடை செய்யும்போது இசைக்கருவிகளைக்கொண்டு பெருமுழக்கம் செய்வதை வழக்கமாகக்கொண்டனர் "வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப் பழனப்பல்புள் இரிய" (நற். 350) என்றும், "வெண்ணெல் அரிநர் பின்றைத்ததும்பும் தண்ணுமை வெரீஇய தடந்தாள் நாரை" (அகம். 40) என்றும், வெண்ணெல் அரிநர்மடி வாய்த் தண்ணுமை பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்" (அகம். 201) என்றும் சான்றோர் பல விடங்களில் இவ்வழக்காற்றை எடுத்துக்காட்டுகின்றனர்.

இங்ஙனம் அறுவடைப்போதில் பிறஉயிர்கட்கு இன்னல் விளையாதவாறு தமது அருளறம் இலங்குதல் வேண்டுமென்று ஒழுகிய தமிழ்வாழ்வு நாம் நினைந்து இன்புறுமாறு அமைந்துள்ளது.

# சாக்கைக் கூத்து

---o---

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

## முன்னுரை

கோவலனும் கண்ணகியும் வாழ்ந்து மறைந்த காலத்தில் சேர நாட்டை ஆண்ட பெருவீரன் செங்குட்டுவன் என்பவன். அவன் தன் நாட்டுள்வந்து விண்ணுலகடைந்த கண்ணகிக்குக் கோயில்கட்ட விரும்பி, இமயத்திலிருந்து கல்லைக் கொணர வடநாடு சென்றான்; சென்று, தன்னை எதிர்த்த ஆரிய அரசரை வென்று, பத்தினியின் உருவத்தைச் செதுக்கத் தக்க கல்லை இமயமலையிலிருந்து கொண்டு வந்தான். அவன் வஞ்சிமாநகர் மீண்ட அன்று அவனது களைப்பைப் போக்கக் கூத்தச் சாக்கையன் நடனமாட வரவழைக்கப்பட்டான்.

## சாக்கையன் ஆடிய கூத்து

வந்த சாக்கையன் சிவபெருமான் ஆடிய கொட்டிச் சேதம் என்னும் கூத்தை ஆடிக்காட்டினான். சிவபெருமான் உமாதேவியை இடப் பாகத்தில் தாங்கியபடி ஆடிய கூத்து இது. சிவபெருமான் மாதொரு பாதியன் ஆதலால், அவனது உடலில் வலப்பாதி ஆணுருவாகவும், இடப்பாதி பெண்ணுருவாகவும் அமைந்துள்ளன. அவ்வமைப்பு நிலையில் சிவபெருமான் ஆடிய கூத்தையே சாக்கையன் ஆடிக் காட்டினான். அவன் ஆடியபொழுது காலில் அணிந்திருந்த சிலம்பு ஓசையிட்டது; கையிலிருந்த பறை ஆர்த்தது; அவனுடைய கண்கள் சிவனுடைய மனக்குறிப்பை உணர்த்தின. அவனுடைய சிவந்த சடை கூத்தின் அசைவால் நாற்றிசைகளிலும் அசைந்தாடியது. ஆனால் இடப்பாகமிருந்த உமையின் பாடகம் என்ற காலணி அசையவில்லை; சூடகம் துளங்கவில்லை; மேகலை ஒலிக்கவில்லை; மென்முலை பசைய வில்லை. அவளது குழை என்னும் காதணி ஆடவில்லை; நீண்ட கூந்தலும் அவிழவில்லை. இங்ஙனம் உமையவளை இடப்பாகத்தில் ஏந்தி, திரிபுரம் எரித்த பின்னர் முக்கண்ணன் ஆடிய கொட்டிச் சேதம் என்னும் கூத்தை மேற்சொல்லப்பட்ட சாக்கையன் ஆடிக்காட்டினான்.

திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையில் படுபறை யார்ப்பவுஞ்
செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவுஞ்
செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்
பாடகம் பதையாது சூடகம் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை யசையாது
வார்குழை யாடாது மணிக்குழ லவிழா
துமையவ ளொருதிற னாக, வோங்கிய
விமையவ னாடிய கொட்டிச் சேதம்
(சிலம்பு, நடுகற்காதை, வரி-67-75)

## பறையூர்ச் சாக்கையன்

இவ்வனம் இக் கூத்தை ஆடியவன் பறையூரைச் சேர்ந்தவன் என்றும், அவ்வூர் நான்மறையோரைக் கொண்டதென்றும் சிலப்பதிகாரம் செப்புகிறது.

பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கையன் (ஷெ வரி. 76-77)

செங்குட்டுவன் வஞ்சிமாகர் வந்தவுடன் சொல்லியனுப்ப, அன்றே சாக்கையன் வந்தாடினான் ஆதலின், பறையூர் என்பது வஞ்சி மூதூர்க்கு அண்மையில் இருக்கவேண்டும். இதனை ஆராய்ந்து பார்த்த வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார், "இப் பறையூர் இக் காலப் 'பரூர்' என்பது இவ் வூரில் கடிப்புத் தொழிலையுடைய பிராமண சமூகம் ஒன்று நிலைபெற்று வாழ்கின்றது," என்று கூறியுள்ளார்.[1]

## மலையாளத்தில் சாக்கையர்

சாக்கையர் என்னும் பெயருடன் கூத்தாடும் பிராமண வகுப்பினர் நம் தமிழகத்தில் இல்லை; ஆயின், சேரநாடான மலையாளத்தில் இன்னும் இருந்துவருகின்றனர். மலையாளத்தில் கோவிற்பணி செய்பவர்கள் 'அம்பல வாசிகள்' எனப்படுவர். நம்பியாசான், புஷ்பகன் (பூப்பள்ளி), சாக்கியர். பிராமணி அல்லது தெய்வம்படி, அடிகள்,

[1] சேரன் வஞ்சி, பக். 62.

நம்பியார், பிஷாரடி, வாரியார், நாட்டுப்பட்டன், தீயாடுண்ணி, குருக்கள், பொதுவாள் என்னும் பிரிவினர் 'அம்பல வாசிகள்' என்னும் பொதுப்பெயரால் குறிக்கப்படுகின்றனர். அம்பலம் என்பது கோவில். வாசி என்பதற்கு வாழ்பவர் என்பது பொருள். எனவே, அம்பல வாசிகள் என்பதற்குக் கோவிலால் வாழ்பவர் என்பது பொருளாகும். இவருள் அடிகள், சாக்கியர், நம்பியார், புஷ்பகன், தீயாட்டு நம்பியார் என்பவர் பூணூல் அணிந்தவர்; பிறர் பூணூல் அணியாதவர். உயர் வகுப்புப் பெண்ணுக்கும் தாழ்ந்த வகுப்பு ஆணுக்கும் பிறந்தவர் பிரதிலோமர் எனப்படுவர். தாழ்ந்த வகுப்புப் பெண்ணுக்கும் உயர் வகுப்பு ஆணுக்கும் பிறந்தவர் அநுலோமர் எனப்படுவர். இவ்விரு வகையாலும் வந்தவர் மரபினரே அம்பல வாசிகளுள் பல இனத்தவர் என்று கொச்சிநாட்டு மக்கள் தொகை அறிக்கை கூறுகின்றது.[2] சாக்கியர் (சாக்கையர்) மறு கூறியுள்ள சூதர்[3] போன்றவர்.[4] சூதர் பிராமண மனைவிக்கும் க்ஷத்திரிய கணவனுக்கும் பிறந்தவர்.

சாக்கையரும் சாக்கைய நம்பியாரும் ஓரினத்தவர்.[5] எனினும் சாக்கையர் பூணூல் அணிவர்; சாக்கைய நம்பியார் பூணூல் அணியார். சாக்கைய நம்பியார் பெண்களே 'நங்கையார்' எனப்படுவர். சாக்கையர் நங்கையாரை மணப்பர்; ஆயின், சாக்கைய நம்பியார் சாக்கையர் பெண்களை மணத்தலாகாது.

---

[2] Cochin census report, 1901 : Castes and tribes of S I. Vol. I. p. 30.

[3] சூதர், மாகதர், வைதாளிகர், என்போர் ஆடல் பாடல்களில் வல்லவர்.

[4] Castes and tribes of S. I. Vol. II. p. 8.

[5] ஒரு நம்பூதிரி பெண்மணி ஒழுக்கம் கெட்டனள் என்பதைக் கண்டறிவதற்கு முன்பு பூணூல் அணிந்திருந்த அவளுடைய பிள்ளைகள் சாக்கையர் என்றும், அப்பொழுது பூணூல் அணியப்படாதிருந்த பிள்ளைகள் சாக்கைய நம்பியார் என்றும் பெயர் பெற்றனர். இவருள் சாக்கையர், 'மக்கள் தாய முறை'யைப் பின்பற்றுபவர். சாக்கைய நம்பியார் 'மருமக்கள் தாயமுறை'யைப் பின்பற்றுபவர்.— Malabar Gazetteer: castes and tribes of S. I. Vol. II. p. 10.

சாக்கையர் பெண்கள் தம் இனத்தவரையே மணக்கலாம்; அல்லது நம்பூதிரி ஆண்களுடன் 'சம்பந்தம்' முறையில் வாழ்க்கை நடத்தலாம். அவர்களுக்கு 'இல்லோத்தம்மமார்' என்பது பெயர். அவர்தம் அணிவகைகள் நம்பூதிரிப் பெண்கள் அணிவன போன்றனவே. சாக்கைய ஆடவர், நம்பியார் பெண்களை மணக்கலாம். சாக்கையருள் புரோகிதர் உண்டு. ஆயின், இறப்பு நிகழ்ச்சியிலும் பிறப்பு நிகழ்ச்சியிலும் பார்ப்பனப்புரோகிதன் இடம் பெறுவான். அவர்கள் பதினொருநாள் தீட்டுடையர். காயத்திரி மந்திரம் பத்துமுறை ஓத அவர்களுக்கு உரிமை உண்டு.

## சாக்கையர் கூத்து

புராணகதைகளைக் கூறுதலும் நடித்தலுமே இவர்தம் தொழில். ஒரு கதையைக் கூறும்பொழுது இச்சாக்கையர் எண்ணற்ற உபகதைகளை விளக்கத்திற்காக இடையிடையே செருகுவர். கேட்போர் தம்மை மறந்து இருக்கத்தகும் நிலையில் கதைகளைக் கூறுவதிலும் நகைச்சுவை மிகுவிப்பதிலும் நடிப்பதிலும் இச்சாக்கையர் இணையற்றவர். வட திருவாங்கூரில் உள்ள ஒவ்வொரு சிறப்புடைக்கோவிலில் நடைபெறும் விழா நிகழ்ச்சிகளிலும் சாக்கையர் கூத்துச் சிறப்பிடம் பெற்றிருக்கும். அவர் கூத்தாடுமிடம் ஒரு தனிக் கட்டடமாகும். அதற்குக் 'கூத்தம்பலம்' என்பது பெயர். அவ் வம்பலத்தில் சாக்கையன் முக்காலிமீது அமர்வான். அவன் தலையில் விநோதமான சரிகைத் தலைப்பாகை காட்சியளிக்கும். ஓரத்தில் பல நிறங்களமைந்த அகலத்தில் குறுகிய நீண்ட ஆடையை இடுப்பைச் சுற்றிலும் அணிந்திருப்பான். அவ் வாடை கணக்கற்ற மடிப்புக்களை உடையதாகவும், கண்கவரத் தக்கதாகவும் காட்சியளிக்கும். அவ்வாடை பற்றிய விளக்கத்தை வருணிக்க இயலாது.

சாக்கையனுக்குப் பின்புறம் 'நம்பியார்' என்பவன் நின்றிருப்பான். அவனுக்குமுன் 'மிளாவு' (முழவு) என்ற வாத்தியம் வைக்கப்பட்டிருக்கும். அதன் ஓசை இடிபோசையை ஒத்திருக்கும். கூத்தின் தொடக்கத்திலும் இறுதியிலும், சாக்கையன் பாடும் வடமொழிச் சுலோகத்தின் நடுவிலும் கடைசியிலும் நம்பியார் முழவைத் தட்டுவான்.

நம்பியார் இனத்தைச் சேர்ந்த பெண்மணி நங்கையர் எனப்படுவாள். அவள் தாளத்தைக் கையிற் பிடித்தபடி சாக்கையனுக்கு எதிரில் அமர்ந்திருப்பாள். அவள் அத்தாளத்தை வேண்டும்போது தட்டுவாள். அவையோர் அனைவரும் தலையசைத்தும் உடலசைத்தும் சாக்கையனுடைய கூத்தினையும் பேசும் பேச்சினையும் கேட்டு மகிழ்ச்சி கொள்ளும்போது, நங்கையார் சிலைபோல அமர்ந்திருப்பாள். அவள் சிறிது புன்முறுவல் கொள்ளினும் கூத்து உடனே நிறுத்தப்படும். நங்கையாரும் தெய்வங்களைப் போல வேடம் புனைந்து அதே மேடையில் நடித்தலும் உண்டு.[6]

சாக்கையன் அவையில் உள்ளோரைக் குறிப்பிட்டு இடையிடையே வேடிக்கையாகப் பேசுவான். ஆனால், அப்பேச்சு எவரையும் புண்படுத்தாது. எல்லோரும் அதனை இன்பமாகக் கேட்பர். சாக்கையன் வீமனைப்போல நடிக்கும்பொழுதும் பேசும்பொழுதும் அவையோர் வீமனே வந்து நடிப்பதாகவும் பேசுவதாகவும் எண்ணுவர். இந்த அளவு உண்மை நடிப்புச் சாக்கையனிடம் உண்டு.

## சோழநாட்டில் சாக்கையர்

இச்சாக்கையர் சேரநாட்டோடு நிற்கவில்லை. சோழப்பேரரசனை முதலாம் இராசேந்திரன் காலத்தில் காமரசவல்லி என்னுமிடத்துச் சிவன்கோவில் விழாவில் நடித்த சாக்கையன் ஒருவனது கூத்தைப் பாராட்டி, அரசன் அவனுக்குச் 'சாக்கைமாராயன்' என்ற பட்டம் தந்த செய்தியை அவ்வூர்க் கல்வெட்டு கூறுகின்றது.[7]

நாம் சிலப்பதிகாரத்திலும் கல்வெட்டுக்களிலும் கண்டறிந்த சாக்கையரும் அவர்தம் கூத்துவகைகளும் இன்றளவும் மலையாள நாட்டில் இருத்தலைக்காண மனம் மகிழ்ச்சி அடைகிறதன்றோ?

---

[6] Castes and Tribes of S. I. Vol. V P. 151

[7] A. R. E. 1924—'25, p. 82.

# தமிழ்த்தாய் தந்த செய்தி

திரு. இரா. சசிவர்ணம், தொழில் ஆசிரியர், பொறியியல் பகுதி,
தமிழ்நாடு பல்தொழில் கல்லூரி, மதுரை.

ஆயிரம் ஆயிரம் ஆண்டினும் முன்பே
தூயநல் இனிய தமிழெனும் பெயரால்
என்றோ தோன்றினேன் இப்பழைய இடத்தை
இன்றோ லாமுரிக் கண்டமென் றியம்புவர்

உடலில் உயிரும் உயிர்உணர் எழுத்தும்
நடமிடு கூடல் நற்சுழி நிலையும்
அண்டத்தி லான அனைத்தையும் விளக்கி
பிண்டத்தி லிவைதம் பிணைப்பையும் துலக்கித்

தலைமைக் கலைபல தருமுயர் நூல்களும்
கலைகளின் நிலையும் கணக்கியல் பலவும்
பாட்டும் பண்களும் படையினர் செயல்களும்
கோட்டோ வியமுதல் நீட்டோ வியங்களும்

பொதுநூல் துறைநூல் பொன்பொருள் அறிநூல்
மதிவளர் நிதிநெறி மருத்துவ நூலுமே
தந்தேன் வாழ்ந்தேன் தகுமிந் நாளிலே
வந்தபல் கடல்கோள் விளைத்ததென் இடத்தை

அவ்விடம் விட்டு அகன்றேன் வடக்கே
இவ்விதக் கோள்களால் இனும்பல சூழ்வால்
உன்னத நூலெலாம் உருபல மாறியும்
மண்ணில் மறைந்தும் மறந்தும் போயின

எஞ்சிய நூல்சில இடங்களில் பிரிந்து
தஞ்சம் புகவே தமதாய் அவரவர்
தம்ஒலி முறையில் தாழ்த்தியும் நீட்டியும்
ஐம்முறை யாயுரை யாடிட அதன்பின்

தென்மொழி தமிழ்மலை யாளமும் தெலுங்கும்
கன்னடம் துளுவும் கலந்தே மிளிர
இன்னும் பலமொழி எண்ணிலே தோன்றினும்
பண்பெறு முறையில் பலகுடு பேசவென்

நல்காப் புடையோன் தொல்காப் பியனும்
ஒல்காப் பெரும்புகழ் உயர்நூல் இயற்றினன்
வள்ளுவன் என்னுயிர் வளமறை உலகோர்
உள்ளத் துணர்த்தினான் ஒளிரும் குறளால்

ஔவையும் பிறரும் அருகனின் வழிவரு
செவ்விய புலவரும் செய்தனர் பலநூல்
செயல்முறை யனைத்தும் செழித்திடு நிலையில்
துயர்தான் இரண்டு தொடர்ந்தன என்னை

இடம்விட் டகன்றேன் என்பதற் கல்லஎன்
உடனினிது வாழ்ந்த உயர்நல மொழிபல
அவற்றில் லத்தீன் ஆரியம் முதலுயர்
கவர்ச்சி தருமொழி காலக் கேடால்

வழிவகைப் பேச்சின் வழக்கமே மறந்து
அழிந்தன எனினும் அவைகளின் உறுப்பெலாம்
தொழிலிலும் வழிபடு தொடர்புடைச் செயல்களில்
வழிசொலும் சொற்களாய் வறண்டவே ஐயோ!

இவ்வித மின்றிநான் இன்றுமே வாழினும்
ஒவ்வாக் கருத்தை உணர்விலாச் சிலர்தாம்
கலைச்சொல் இலையெனக் கலங்கியே இந்நாள்
விலைச்சொல் வாங்கவும் வீணே அலைகிறார்

பழிச்சொல் கூடப் பகர்கிறார் ஐயோ!
எழுச்சி அடுத்து எழுதல் காண்பார்
இரும்பிற் கொருசொல் இல்லா ஆங்கிலப்
பெருமொழி உயர்வும் பிறமொழிக் கூட்டே

இருவடிப் பொருளின் இடைபாம் இதனை
இரும்பென வழைத்தல் இடலமைப் பன்றோ?
தென்னாட் டிரும்பாம் தென்னிரும் பதனை
தேனிரும் பென்று தெரியா துரைப்பர்

ஒவ்வோர் காலமும் உளகலை மாறுமே
அவ்வப் போததற் காகுசொல் மலருமே
கலையும் கலைச்சொல் பலவும் ஆட்சி
நிலைபெறும் நூல்களில் நின்றியங் குறுவொலி

பலவும் இருக்கவிப் பான்மையை யுணரார்
நலங்கெடத் தம்மொழி நாடுவர் பிறமொழி
என்னுயிர் மக்களில் எனைச்சிலர் வெறுக்கவும்
நன்னெறி மிகுபிற நாட்டினர் கால்டுவெல்

வின்ஸ்லோ, டெயிலர், வீரமா முனிபோப்
என்னும் பல்லோர் இயம்புதல் கேளீர்
மனிதரால் பேசிட மதித்திடும் மொழிகளில்
புனிதம் பொலியும் பூரணத் தமிழாம்

இறப்பே அறியா தென்றுமே வாழ்ந்து
சிறப்புடை மொழியாய்ச் செயலில் மிளிரப்
பாண்டியர் சேரர் பன்னலைச் சோழர்
ஆண்டுவர் வெய்திய ஆட்சி மொழியாம்

தேனின் இனிய தென்மொழி யாமிது
நானிலம் வாழுமோர் நடையுயிர் மொழியாய்
தொன்மொழி யன்றியும் தனித்தியலாற் றலால்
முன்மொழி யாகியும் முழங்குமே யென்றுமே

எழுத்தெலாம் வலஞ்சுழி எற்பரோர் ஒலியென
பழுத்தநல் மேதையர் பகர்தலைக் கேட்டீர்
இவ்வித உயர்வெலாம் இயம்பினர் பிறரே
செவ்வனீர் உணர்வது சீரிய கடமையாம்

தன்னுயிர் மானம் தமிழர்நீர் உணர்ந்து
இன்பம் அமைய எழுவீர் எழுவீர்
உலகோர் இரும்புருக் குணரா நாளிலே
பலசனிச் சுரங்கம் படர்ந்தநம் நாடாம்

இனியும் பலபொருள் இந்நாட்டு மண்ணிலே
தனித்தனி யாவும் தேங்கிக் கிடப்பதை
ஆய்க வழிவகை அனுபவ அறிவுரை
வாய்ப்புக் கிடைக்கின் வரைந்து சொல்வோம்

சேலம், சாத்தூர், சிவகங்கை பலகரு
வூலப் புதைகனி உணர்ந்தெடுத் திருக்கியே
பலவகைக் கருவிகள் பாங்காய் அமைத்து
நலங்காண் தொழில்நம் நாட்டார் அறிந்து

மலைகளைப் பிளந்துபல் மண்டபம் கட்டினர்
சிலையும் சிற்பமும் செதுக்கி எழுப்பிய
உன்னத கோபுரம் உலகோர் போற்ற
இன்றும் உளதே இனியநற் சான்றாய்

இந்நாட் டிரும்பே இவைகளைச் செய்தன
என்பதை நீங்கள் இனியேனு முணர்ந்து
அருந்தொழில் மிக்கோர் ஆற்றலில் தக்கோர்
பெருந்தகைத் தமிழரின் பரம்பரை வந்தீர்

பிறந்தநல் நாடு பெருநலம் பெற்றுச்
சிறந்த தொழில்கள் செய்தே உயர்ந்து
வறுமை ஒழித்தும் வாய்மை
உறுநலம் பெற்றும் உயர்ந்து வாழ்வீரே.

---

# வாணிக மந்திரம்

—————(o)—————

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

வாணிகம் என்பது நமது நாட்டில் பொதுவாக யாவரும் செய்யக் கூடிய தொழில் என்று பலரும்கருதுகின்றனர். உடம்பை வருத்திச் செய்யக்கூடிய உழவு முதலிய தொழில்கள் இழிந்தவை என்றும், அரசியலில் அரைப்பணச் சம்பளத்துக்காயினும் வேலை பார்ப்பதுதான் உயர்ந்தது என்றும், வாணிகம் செய்வது நடுத்தரமானது என்றும் இடைக்காலத்தில் மக்கள் மனதில் ஒரு கருத்துத் தோன்றி நிலவுவதாயிற்று. இதன் விளைவாகக் கற்றவர் அரசியல் வேலையாட்களாகவும், பணிபுரிபவர்களாகவும் அலுவலாளர்களாகவும் புகுந்து வாழ்க்கை நடத்துவாராயினர். கல்லாதவர் பலரும் உழவு முதலிய தொழில்களை மேற்கொண்டனர். சிறிது கற்று இடைநிலையில் நின்றவர் வாணிகம் செய்பவராயினர். வேலைகிடைக்காதவன் வெற்றிலை பாக்குக் கடையேனும் வைத்து வாணிகம் செய்து வாழலாம் என்று கருதும் அளவுக்கு வாணிகம் நடக்கத் தலைப்பட்டது.

சிறந்த கல்வியறிவும் வலிய உடலுழைப்பும் இல்லாதவர் பலரும் வாணிகத்தில் நுழைந்தமையால் வாணிகத் தொழில் ஒரு சில இடங்களில் தாழ்வாகவும் கருதப்படுவதாயிற்று. ஒரு சிலர்க்குப் பொழுது போக்காகவும் பயன்பட்டது. இத்தகைய வாணிகத்தில் வளர்ச்சியும் வளமையும் உண்டாதற்கு வழி இல்லாமையால் நட்டம் வருவதும், நிலைதவறிவீழ்வதும், எழுவதும் இயற்கையென்று மக்கள் கருதுகின்றார்கள். "முப்பதாண்டு வாணிகம் செய்து வாழ்ந்தவரும் இல்லை, கெட்டவரும் இல்லை" என்றொரு பழமொழியும் உலகில் நிலவுகின்றது. மேனாட்டு வணிகர்கள் தங்கள் வாணிகத்திற்கு வெள்ளிவிழா (25ஆம் ஆண்டுவிழா) பொன்விழா (50ஆம் ஆண்டுவிழா) மணிவிழா (80ஆம் ஆண்டுவிழா) நூற்றாண்டு விழா என விழாக் கொண்டாடுகிறார்களே; அதுபோல் நம்மவர் ஏன் செய்யமுடிவதில்லை? அவர்கட்கு மாத்திரம் நிலையாக நின்று இப்படி விழாக்கள் நடத்த இயலுகின்றது ஏன்? என்று நினைப்பது இல்லை. செய்யும் வாணிகத்தில் உயர்ச்சியுண்டானல் "நல்ல காலம்" என்றும், "நல்ல போகம்" என்றும், வீழ்ச்சியுண்டானல் "திசை கெட்டுப் போயிற்று", "கிரகம் சரியாயில்லை"

என்றும் சொல்லிப் பழி பாவங்களைக் காலத்தின் மேலும் கிரகங்களின் மேலும் தள்ளிவிட்டுத் தாம் குற்றமற்றவர்களாகக் கருதிக்கொள்வது இயல்பாக இருக்கிறது. விதி யென்றும், வினை யென்றும், கருமம் என்றும் சொல்லிக் கொள்வது பெருவழக்கு. விதி வினைகளின்மேல் பழிபோட்டுக் கெடுகின்றவருக்கு நமது பெரியோர்கள் நல்ல அறிவுரையும் சொல்லியுள்ளார்கள்; செய்யும் தொழிலில் விதி வினைகள் குறுக்கிட்டாலும் நாம் நமது உழைப்பாலும் அறிவு வன்மையாலும் வென்று விடலாம் என்று நம் முன்னோர் நன்றாக அழுத்தம் திருத்தமாக அறிவுறுத்தியுள்ளார்கள். அப்படியிருந்தும் மிகப்பலர் தெளிவில்லாமல் "ஐயோ; வினையே" என்று அழுவதும், அதற்காக நவக்கிரகங்களுக்கு வழிபாடு செய்வதும் மேற்கொண்டு அவதிப்படுகின்றார்கள். அவர்களுக்குத் திருஞானசம்பந்தர் முதலியோர் அறிவுறுத்தஉரை செவியில் ஏறுவதில்லை; தெளிவில்லாத சோதிடரும் திறமையில்லாத கோயில் பூசாரியும் சொல்லுவதுதான் நல்ல அறிவுரையாக விளங்குகிறது. வணிகர் சமுதாயத்தில் இந்த இழிவானநிலை எப்படி உண்டாயிற்று? ஏன் உண்டாயிற்று? என்பன போன்ற ஐயங்கள் இப்பொழுது எழுந்துள்ளன. அவற்றை ஆராய்ந்தால் அது பாரதமாய் விரியும்.

வாணிகத்தின் கீழ்நிலைக்குக் காரணமாக ஒன்றைமாத்திரம் இப்போது தெளிவாகக் கூறலாம். வாணிகம் என்பது மக்கட் சமுதாயத்துக்குச் செய்யும் சிறந்த தொண்டு என்பது மேனாட்டவர் கொள்கை. நம் நாட்டவர் அதனை ஒரு சூதாட்டமென்று கருதுகின்றார்கள். பெருந்த நிலையில் வாணிகம் செய்து ஒருவர் கெட்டுவிடுவாரானால் 'சூதாட்டத்தில் எப்படி வெற்றிதோல்விகள் நிலையில்லையோ அப்படியே வாணிபத்திலும் இலாப நட்டங்கள் நிலையில்லை" என்று சொல்வது வழக்கமாக இருப்பது யாவருக்கும் தெரிந்த செய்தி. வாணிபம் ஒரு சூதாட்டம் என்று எவன் எக்காலத்தில் சொன்னானோ தெரியவில்லை. அந்தப் பெரும்பாவியின் சொல்லால் நமது நாடு வாணிகவுலகில் மதிப்பிழந்து போயிற்று. வணிகரிடையே பொய்யும் வஞ்சனையும் மோசமும் இயற்கைப் பண்பாக அமைந்துவிட்டன.

நமது நாட்டுப் பாராளுமன்றத்தில் ஒருமுறை நமது நாட்டு வாணிகத்தைப்பற்றிப் பேச்சுவந்தபோது வணிகத்துறை அமைச்சர் எழுந்து நின்று நம்நாட்டு வணிகரிடம் உள்ளதென ஒரு பெருங்குறையை எடுத்துக் கூறினர். நம் நாட்டு வணிகர் தாம் விற்கும் பண்டங்களில் மோசமும் வஞ்சனையும் செய்கிறார்கள்; அதனால் வெளிநாட்டவர்க்கு

நம்பிக்கை குறைந்துவிட்டது என்று வருந்திக் கூறினர். வெளிநாட்டு மக்கள் இகழ்ந்து வெறுத்துத் தள்ளக்கூடிய அளவு பண்டங்களில் மோசம் செய்யப்படுகிறதென்றால், உள்நாட்டு வாணிகத்தில் நடக்கும் வஞ்சனைக்கு அளவு சொல்ல முடியுமா?

மக்களுக்குத் தேவையான பொருள்களுள் அரிசி, பருப்பு, புளி, மிளகு, மிளகாய்ப்பொடி முதலியன மிகவும் சிறந்தவை. நமது நாட்டுக் கடைத்தெருவில் விற்கப்படும் அரிசி முதலியவைகளை ஆராய்ந்தால் கல்லும் மணலும் கலவாத அரிசியும், பருப்பும் கிடையாது. புளியில் களிமண்ணையும், மிளகில் வேறு விதைகளையும் மிளகாய்ப் பொடியில் செங்கற் பொடியையும் கலந்துவிடுகிறார்கள். நல்லெண்ணெயில் வேறு எண்ணெய்களைக் கலப்பதும், சீனியில் மணலைக் கலப்பதும், பாலில் நீரையும் வெண்ணெயில் மெழுகையும் கலப்பதும் இயல்பாகவுள்ளன. துணிக்கடையில் நடக்கும் மோசங்களுக்கு எல்லையில்லை. எட்டு கசம் துணி வாங்கினால் அது மீள அளக்கும்போது ஏழரை கசத்துக்கு மிகுவதில்லை; ஏழு கசச் சீலை யென்பான்! அளந்தால் அது ஆறரை கசமே யிருக்கும்; ஆறு முழம் வேட்டி யென்பதை அளந்தால் அது ஐந்தரை முழந்தான் இருக்கும். இவற்றை நாடோறும் காண்பதால் மக்கள் மனதில் வாணிகம்என்பது சூதும் வஞ்சனையும் கலந்ததொழில் என்ற கருத்து வேரூன்றிவிட்டது. மக்களில்பெரும்பாலோர் போதிய கல்வியறிவில்லாதவர்களாதலால் வாணிகத்திற்கு இந்த இழிநிலை இயல்பாய்ப் போய்விட்டது; இந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களும் இவர்களில் வேறானவரல்லர் ஆகலால், அவர்கள் நடத்தும் அரசியலும் இதைத் தீங்கு என்று நினைக்கவோ, இத்தீங்கை ஒழித்துக்கட்டுவதற் கேற்ற நடவடிக்கை மேற்கொள்ளவோ முன்வரவில்லை. உள்நாட்டில் இப்படிச்செய்து பழகிய மோசம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் பொருள்களில் பெருவாரியாகப் புகுந்து வெளிநாட்டவர் இகழ்ந்து வெறுத்துத் தள்ளுதற்குரிய அவகேட்டை விளைவித்திருக்கிறது. பொருள் துறையில் படிப்படியாக முன்னேற முயன்றுகொண்டிருக் கும் நமது நாட்டுக்கு இந்தஇழிசெயல் பெருத்ததீங்கை உண்டுபண்ணி வருவதை நமது நாட்டு வணிகர்கள் நினைப்பதாகவும் தெரியவில்லை; சமுதாயத்துக்கு இதனால் எவ்வளவுபெரிய துரோகம் செய்யப்படுகிறது என்பதும் அவர்கள் அறிவுக்கு எட்டியதாகத் தோன்றவில்லை. இன் றும் இந்த வஞ்சனையும் மோசமும் துரோகமும் நமது நாட்டு வணிகர்

சூழலில் வளமாக நிலைபெற்றிருப்பதே இதற்குத் தக்க சான்று பகருகின்றது.

இந்நிலை நமது நாட்டு வாணிகத் துறையில் நிலவுவதால் ஒருவர் பல ஆயிரக்கணக்கில் வைத்து வாணிகம் செய்தாலும் அவர் சொல்லும் விலையில், சொல்லில், ஏழைமக்களும் நம்பிக்கை வைப்பதில்லை. ஒரு பொருளின் விலை அவர் ஒரு ரூபா என்பாரானால், வாங்குபவர் அதைச் சிறிதும் நம்பாமல் முக்கால்ரூபா அல்லவா? என்று கேட்பார். பின்பு சிறிதுபோது சொல்லாடல் நிகழும்; முடிவில் அவர் அந்தப் பொருளை முக்கால் ரூபாய்க்கோ பதினான்கணாவுக்கோ வாங்கிக்கொண்டு போவார்; பல்லாயிரம் ரூபாய் முதல்வைத்து வாணிகம் செய்யும் முதலாளியின் சொல் மதிப்பிழந்து பொய்ப்பட்டே போகும். தனது சொல் பொய்ப்படுவதையோ அதனால் தனது நாணயம் பொதுமக்கள் முன்பு கெட்டு நிற்பதையோ அவர் நினைப்பதும் இல்லை; உணருவதும் இல்லை. வேறு சிலர் தமது சொல்லுக்கு மதிப்போ நாணயமோ பொது மக்கள் வையாமைகண்டு "ஒரே விலை" என்று வாணிகம் செய்யத் தலைப்பட்டனர்; ஆயினும் ஒரே விலைக்கேற்ற உயர்ந்த பொருளை அளவு குறையாமல் விற்பதைநெகிழவிட்டார்; ஒரேவிலை என்பாரிடத்தும் பொதுமக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. மக்கள் சமுதாயத்தில் நம்பிக்கையும் நாணயமும் உண்டு பண்ணாத வாணிகமோ தொழிலோ எதுவும் பலநாள் நீடிக்க இயலாதாகையால், நிறுவிய ஒரு சில ஆண்டுகளில் மிகப்பல வணிகர் வீழ்ச்சியுற்று இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயினர்.

நமதுநாட்டு வணிகர் சொல்லும் சொற்களில் நம்பிக்கை இல்லாது போனபடியாலும், அவர்கள் விற்கும் பொருள்களில் வஞ்சனையும் மோசமும் கலந்துள்ளமையாலும், வாங்கும் பொதுமக்கள் எந்தக் கடைக்குச் சென்றாலும், கடைக்காரர் சொல்லும் விலையைக் குறைத்துக் கேட்கும் (பேரம் பேசும்) வழக்கமும், அவர்தரும் பொருளின் தன்மையிலும் அளவிலும் ஐயப்படும் வழக்கமும் இயல்பாய் உள்ளன. இதனால் நமது நாட்டின் பெயரும் மதிப்பும் கெடுவதுகண்டே நமது அரசியலார் வெளிநாடு செல்லும் நமது நாட்டவர்க்குச் சில அறிவுரைகளை அச்சடித்துத் தருகின்றார்கள். அவற்றில் ஒன்று: "நீங்கள் வேறு நாடுகளில் கடைக்குச் சென்றால், வாங்கவிரும்பும் பொருளுக்கு என்ன விலை சொல்லப்படுகிறதோ, அதை அப்படியே கொடுத்துவிடவேண்டும்; பேரம் பேசக்கூடாது" என்பது. சென்ற சில ஆண்டுகட்கு முன்

நமது தென்னாட்டிலிருந்து அமெரிக்காநாட்டிற்குச் சென்றிருந்த ஒருவர், ஒருகடையில் ஒரு பொருளின் விலையைக் கடைக்காரர் சொன்ன விலைக்குக் குறைவாகக் கேட்டாரென்பதற்காக அக்கடைமுதல்வர் அவர்மேல் "மானநஷ்ட வழக்குத்தொடுத்த" செய்தி நாடறிந்த தொன்று. அதனால் நமது நாட்டு வாணிகத்தின் மானம் "கப்பலேறி விட்டது." இப்படியே மிளகுப் பொதியில் வேறு பொருள் கலந்தும், புளியில் மண்ணைக் கலந்தும் நமதுநாட்டு வாணிகம் நமது நாட்டின் புகழுக்கும் பெருமைக்கும் பொல்லாத பழியும் வசையும் கொண்டுவந்ததைச் செய்தித்தாள்கள் தெரிவித்துள்ளன.

வட அமெரிக்காவில் இல்லினுய்ஸ் என்பது ஒரு மாகாணம்; அங்கே சிகாகோ என்றொரு பெரிய நகரம் உளது. அந்நகரத்தில் ஒரு வாணிக நிலையம் சிறப்புடன் தொடங்கி வாணிகம் புரிந்துவந்தது. பல செல்வர்கள் அதற்குப் பங்காளிகளாக இருந்தனர். சில ஆண்டுகட்குப் பின் அதன் வாணிகத்தில் ஏதோ ஒரு குறையுண்டாக, அவ் வாணிக நிலையம் பெரு நட்டத்துக்கு உள்ளாகி வீழ்ச்சியடையத் தொடங்கிற்று. பங்காளிகளுக்கு மனவேதனை மிகுந்தது. "முதலிலார்க்கு ஊதியம் இல்லை' என்றாற்போல முதலுக்கே கேடு தோன்றத் தலைப்பட்டது. அப்போது அதன் பங்காளிகளில் ஒருவரான ஹெர்பார்ட் டேயிலர் (Herbart Teylor) என்பவர் தலைமையில் அதனை ஒப்படைத்தனர். அப்போது அவர் வேறோரிடத்தில் மிக்க வருவாயுள்ள தொழிலில் ஈடுபட்டிருந்தார், ஆயினும் அவர் அதனைத் துறந்துவிட்டு இந்த வணிக நிலையத்தை ஏற்று நடத்தும் பொறுப்பை மேற்கொண்டார்.

டெயிலர் (H. Teylor) முதல்வராய்ச் சிறிது காலம் அதன் நடைமுறைகளை நன்கு ஆராய்ந்தார். தொழிலாளிகளின் சொற்களையும் செயல்களையும் ஊன்றி நோக்கினர். விற்கப்படும் பொருள்களின் நலம் தீங்குகளை நன்றாகப் பார்வையிட்டார். வாணிகத்தின் மதிப்புக்கும் நாணயத்துக்கும் மாசுஉண்டாக்கிய காரணங்களைக் கண்டார்; அதைப் போக்கும் துறையில் அவர் கருத்து ஆழ்ந்து நின்றது. முடிவில் அவர் மாசு துடைத்து மதிப்பை உயர்த்திப் பொதுமக்கள் மனத்தில் நம்பிக்கை உண்டுபண்ணுதற்கென்று ஒருசில "மந்திரங்களைக்" கண்டு பிடித்தார். அதைப் பின்பு ஒவ்வொரு தொழிலாளிக்கும் "உபதேசித்து" அதை மறவாமல் கைக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி

னர். தொழிலாளரின் மனதில் வேரூன்றிய "மந்திரம்", விரைவில் செயல்பட்டது. சிறிது காலத்திற்குள் அவரது வாணிக நிலையத்தின் புகழ் காட்டுத் தீப்போல எங்கும் பரவிற்று; வாணிகம் பெருகிற்று; லாதியம் மிகுந்தது; வீழும் நிலையிலிருந்த நிலையம் 200000 டாலர் வருவாயுள்ள பெரு வாணிகமாய் இன்று பிறங்கியுளது. மக்கள் அனை வருக்கும் அதன்பால் மிக்க நம்பிக்கையும் நன்மதிப்பும் உண்டாகவே, இப்போது யாவரும் பாராட்டும் பெருமை பெற்று விளங்குகிறது.

அப்படியானல் அந்த "மந்திரம்" யாது என அறிய வேண்டு மன்றோ? அதனை அவர் ரோட்டரி யென்னும் சுழல்கழகத்தின் வாயி லாக உலக மக்கள் அறிந்து பயன்படுமாறு விளக்கமாகத் தெரிவித் துள்ளார்.

1. யாரேனும் தமது வாணிக நிலையத்துக்கோ கடைக்கோ வந்து ஏதேனும் ஒரு பொருளைக் கேட்டால், அப்பொருள் இருக்கு மானல், அதை ஆராய்ந்து, "இது உண்மையான பொருள்தானா?" என்று முதலில் பார்க்கவேண்டும். இது தான் முதல் மந்திரம், போலி யாகவோ மோசமானதாகவோ அந்தப் பொருள் இருக்கக் கூடாது. உண்மையானதாக இருந்தால்தான் கொடுக்கவேண்டும்.

2. ஒரு பொருளின் விலையைச் சொல்லி வாங்கும்போது நாம் வாங்கும் விலை நேர்மையானதா? என்று காணவேண்டும். இஃது இரண் டாவது மந்திரம். நேர்மையில்லாத வழியில் விலை குறிப்பதும் விற்ப தும் மக்கள் மனதில் அருவருப்பை உண்டாக்கும்; அதனல் வாணி கம் தடைப்பட்டுச் சிதையும்.

3. நாம் இப்படிச் சொல்லுவதாலும் செய்வதாலும் நம்மிடத்தில் பொதுமக்களுக்கு நல்ல நம்பிக்கை உண்டாகுமா? பொதுமக்களுக்கும் நமக்கும் இடையே உயர்ந்த நட்பு உண்டாகுமா? என்று ஆய்ந்தறிய வேண்டுவது மூன்றாவது மந்திரம். நம்பிக்கையால் வாணிகம்பெருகும்; நட்பினல் அது செழிக்கும். நாட்டில் நமது தொழிலுக்கு மதிப்பும் புகழும் தோன்றிச் சிறக்கும்.

4. நமது இந்தச் செய்கையால் எல்லோர்க்கும் நன்மை விளை யுமா? என்று நோக்குவது நான்காவது மந்திரம். பிறர்க்கு நன்மை செய்

வது குறித்தே வாணிகத் தொழில் உண்டாகியிருக்கிறது. அவரவர்க்குத் தேவைப்படும் பொருள்களை அவரவரும் தாமே தேடிக்கொள்வது எளிதில் நடக்கக்கூடியதன்று. ஒருவர் உண்டு பண்ண, உண்டு பண்ணிய பொருள்களை ஒருவர் ஓரிடத்தே கொண்டு சேர்த்துத் தொகுக்க, ஒருவர் அவற்றைப் பலருக்கும் வகுக்க, ஒருவர் எடுத்து விற்க, இப்படிப் பலரும் பலவகையில் உழைக்க வேண்டும். நமது செயலால் வாங்குபவரும் விளைவிப்பவரும் இடையில் பல நிலைகளில் வேலை செய்பவரும் யாவரும் நன்மை பெறவேண்டும். மேலும், தேவைப்பட்டு வாங்குவோருள்ளும் ஏழை எளியவர், சிறியவர் முதியவர், தெரிந்தவர் தெரியாதவர் யாவரும் இதனால் நன்மைபடைய வேண்டும். தேவைப்பட்ட பொருள் செம்மையான நிலையில் கிடைக்கப் பெற்றால் பெறுகின்ற மக்கள் மனதில் அமைதியும் இன்பமும் உண்டாகும். இவ்வாறு மக்கட் சமுதாயம் தேவையானவைகளைச் சிறந்த நிலையில் பெற்று அமைதியாகவும் இன்பமாகவும் மனநிறைவோடும் வாழுமாறு தன் செயலை நாணயமாகவும் ஒழுங்காகவும் செய்வதுதான் உண்மையான வாணிகம்; இதுபற்றியே, பொதுமக்கட்குச் செய்யும் தொண்டுகளில் தலைசிறந்தது வாணிகம் என அறிஞர் கூறுகின்றனர்.

இந்த "நான்கு மந்திரமும்" உரிமைகொண்டு வாழும் உலக நாடுகளில் வணிகர் சமுதாயத்தில் நன்கு பரவியிருப்பதால், அந்த நாடுகள் செல்வமும் புகழும் சிறப்புறப் பெற்றுத் திகழ்கின்றன. நமது நாட்டு வணிகர்களும், வாணிகம் என்பது பொதுமக்கட்குச் செய்யும் பெரிய தொண்டு என்பதை அறிய முடியாத பேதைகளல்லர்; அதனால் அவர்கள் இந்த "நால்வகை மந்திரங்களையும்" கற்று நடைமுறையில் தவறாமல் கையாளுவார்களானால் சிறப்பும் செல்வமும் பெற்று மகிழும் ஏனைய நாடுகளைப் போல நமது நாடும் பொருளும் புகழும் பூத்துப் பொன்னாடாய்ப் பொற்புமிகும் என்பதற்கு ஐயமேது?

---

# திருவள்ளுவர்கால இல்வாழ்வும் துறவும்

**வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள் M. A.**
**விரிவுரையாளர், தமிழ்க்கல்லூரி, மயிலம்.**

ஆடவர் தம்மால் காதலிக்கப்பட்ட மகளிரொடு கூடிவாழும் வாழ்க்கையே இல்வாழ்க்கை எனப்படும். இங்ஙனம் ஒருங்கமைந்து வாழும் ஆடவரும் மகளிரும் உலகினர்க்குத் தம்மாலியன்ற நன்றி புரிதல்வேண்டும். ஆதலினாற்றான் "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" என இல்வாழ்க்கையைச் சிறப்பித்தார். 'எனப்பட்டது' என்பதற்கு என்று "சிறப்பித்துச் சொல்லப்படுவது" என உரை கூறுதல் உன்னுதற்குரியது. துறவும் அறநெறியின்பாற் படுமெனினும் அதனினும் இல்லறமே அறநெறியில் நிற்றற்குரிய சிறந்த நெறியாம் என்பதே அதன் கருத்தாகும். இயல்புடைய மூவர்க்கும் துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் தம்மாலான உதவியை—கடமையைச் செய்ய வேண்டும்; தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம் ஆகியவைகளை ஓம்புதல்வேண்டும்; பழியஞ்சிப் பல்லோர்க்கும் பகுத்துண்டல்வேண்டும். பழியஞ்சாது பிறர்க்குப் பகுத்துண்ணாது வாழும் வாழ்க்கை வாழ்க்கையாகாது. ஆதலின், இல்லறம் மேற்கொண்ட ஆடவரும் மகளிரும் அன்பும் அறனும் இன்றியமையாதனவாகக் கொண்டு வாழ்ந்தனர், வாழவேண்டும் என்பது புலனாம். இந்நிலையிலுள்ள அவர்கள், பிறரையும் உணவின்மை முதலிய காரணங்களால் தீநெறியிற்செல்லாது நன்னெறியில் நின்றொழுகுமாறு செய்தல்வேண்டும். அத்தகைய வாழ்க்கையையுடையோராற்றான் நாடுநலனடையும். அவர்கள் தத்தம் காதலுக்குரியாரையன்றிப் பிறரைக் காமுறுதலாகாது என்பது வாழ்க்கைத் துணை, பிறன்மனை விழையாமை ஆகிய இரு அதிகாரங்களினும் தெள்ளிதிற் புலனாம்.

இங்ஙனம் ஆடவரும் மகளிரும் ஒருங்கமைந்து இல்லறம் ஆற்றவேண்டுமாதலின், அவர்கள் காமம் ஒன்றை மாத்திரம் கருதிக் களவொழுக்கத்திலேயே காலம் கழித்தலாகாது என்பது போதரும். எனவே கற்பொழுக்கமே சிறந்தது, வேண்டற்பாலது என்பதுதானே புலனாம். தலைவன் தலைவியை அவள் தமர் கொடுக்கக் கரணமொடு கொண்டு வாழ்வதுதான் கற்புநெறி எனத் தொல்காப்பியர் கூறுகின்றார். களவொழுக்கத்தை மேற்கொண்டவராயினும் பலரறிய மணம் புணர்தல் வேண்டும் என்பதுதான் சமுதாயவிதி. "கொடுப்போரின்றியும் கரணமுண்டே" என்னும் தொல்காப்பியச் சூத்திரம்

இதனை வலியுறுத்தும். இதுவே பண்டைத் தமிழர்தம் கொள்கை. "களவொழுக்கமே சாலச் சிறந்தது; அதுதான் தமிழர் மணநெறி" எனச் சிலர் கூறுவது பொருந்தாது. 'தலைவன் தலைவி ஆகிய இருவர்க்கும் ஒத்த அன்பு இருத்தல் வேண்டும் என்பதுதான் தமிழிலக்கணம் உணர்த்துவது' என்பதை உணர்தல் வேண்டும். "வேயெனத் திரண்டதோள்" என்னும் குறிஞ்சிக் கலியில், "இனையன கூற இறைஞ்சுபு நிலநோக்கி, நினையுபு நெடிதொன்று நினைப்பாள்போல் மற்றாங்கே, துணையமை தோழியர்க் கமர்த்த கண்ணள், மனையாங்குப் பெயர்ந்தாள் என்னறிவகப்படுத்தே," என, உள்ளப் புணர்ச்சியுற்ற தலைவன் வரைதல் வேண்டிப் பாங்கனுக் குரைத்ததாக இளம்பூரண அடிகள் கூறுவது ஓர்ந்துணரத்தக்கது (தொல் களவி-7.) இதனால் மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப் புணர்ச்சியோடு வரைவு வேண்டுதலுண்டு என்பதும் இந்நெறி உயர்ந்ததாகக் கருதப்பட்டது என்பதும் உன்னியுணர்க. திருவள்ளுவர் திருக்குறளும் இதனையே உரைத்தல் காண்க.

"உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற் கள்ளம் பிறவோ பசப்பு" எனத் தலைவி, தலைவனையே நினைத்தலும் அவன் புகழையே கூறுதலும் உடையவளாதலின் மெய்யும் அவ்விரண்டன் வழி நிற்றல் வேண்டும் பொய்யொழுக்கம் கூடாது' எனக் கூறுதலும், "வீழப்படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார் வீழப் படாஅ ரெனின்" எனத் தலைவி, கற்புடைமகளிரால் நன்கு மதிக்கப்படுவாரும் தம் கணவரால் விரும்பப்படுமாறு வாழ்தல் வேண்டும்' எனக் கூறுதலும், "நசைஇயர் நல்காரெனினு மவர்மாட் டிசையு மினிய செவிக்கு" எனத் தலைவி, 'தன்மாட்டுத் தலைவன் அன்பில னெனினும் அவர்திறம் கேட்டலே விருப்பம்' எனக் கூறுதலும், எத்தகைய துன்பம் வரினும் கணவனைப் பிரியாது அவனது நலத்தில் கண்ணும் கருத்துமாக வாழ்வதே கற்பொழுக்கம் எனப் புலப்படுகின்றன. இதனை "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் குறட் கருத்தொடு ஒப்பு நோக்குக. "தம்மிலிருந்து தமது பாத்துண்டற்றா லம்மா அரிவை முயக்கு." என்பது களவொழுக்கத்தையே விரும்பும் தலைவன் கூறுவதாயினும் அவ்வொருத்தியினிடமே இன்பம் நுகர விரும்புகின்றான் என்பது பெறப்படினும், "உறாஅதவர் போற் சொலினும் செறாஅர்சொ லொல்லை யுணரப்படும்" எனச் சேட்படுத்தப்பட்ட தலைமகன் நினைப்பால் உலகம் களவொழுக்கத்தை விரும்பவில்லை வன்பது புலனாம். "நிறைபரியர் மன்னளியர் என்னாது காமம் மறையிறந்து மன்றுபடும்" என்னும் குறள் அறத்தொடு நிற்றல் வேண்டும் எனத் தலைவி தோழியோடு கூறுவதாகக் குறிப்பதால் களவொழுக்கம் உலகம் வேண்டாததொன்று என்பது புலனாம். 'யாங்கண்ணிற் காணநகுப அறிவில்லார் யாம்பட்ட தாம்படாவாறு'

என்னும் குறளில், "யாம்பட்ட தாம்படாவாறு" என்பதால் களவொழுக்கத்தின் இடையூறுகள் பெரிதினும் மிகும் என்பதோடு களவொழுக்கத்தை மேற்கொள்ளாத மகளிரும் உண்டு என்பதும் புலனாம். "ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல் நீராக நீளும் இந்நோய்" என்னும் குறள் இதனை நன்குவலியுறுத்தல் காண்க. "கழியாக் காதல ராயினும் சான்றோர் பழியொடு வரூஉ மின்பம் வெஃகார், வரையினெவனோ வான்றோய் வெற்ப......தொன்றியல் மரபின் மன்றலயரப் பெண்கோளொழுக்கம் கண்கொள நோக்கி" (அகம் 112) என நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழாரும், "நேரிறை முன்கைபற்றி நுமர்தர, நாடறி நன்மணம் அயர்கம் சின்னாள்" எனக் குறிஞ்சிப்பாட்டில் கபிலரும் கூறுவதனால் களவொழுக்கம் பழிக்கப்படுவதென்பதும், நாடறிய மன்றலயர்தல் தொன்மையானதென்பதும் அந்நன்மணம் புணர்ந்துவாழும் வாழ்க்கையே கற்பியல், சிறந்தது என்பது புலனாம். களவியல் என ஓரியல் வகுத்துரைக்கும் தொல்காப்பியனார்க்கும் களவொழுக்கம் குற்றமுடையதென்பதே கருத்து என்பது, அவரே "அந்தரத்தெழுதிய எழுத்தின் மானவந்த குற்றம் வழிகெட ஒழுகலும்" (தொல், கற்பு 5) எனக்குறிப்பதனால் வெள்ளிடைமலையாம். கரணமொடு கொடுப்பக் கொண்டு வாழும் வாழ்க்கையே வேண்டப்படுவது என்பதனை "நிலையுயர் கடவுள்நின் னிணையடி தொழுதேம், பலரறி மணமவர் பெறுகுவ ரெனவே" "அறுமுகவொருவ நின்னடியிணை தொழுதேம் துறைமிசை நினதிரு திருவடி தொடுநர் பெறுக நன் மணம்விடு பிழைமணம் எனவே" (சிலம்பு குன்றக் குரவை) என இளங்கோவடிகள் இயம்புதலானும் உணர்க.

இங்ஙனம் வாழ்க்கையி லீடுபட்ட ஆடவரும் மகளிரும் நன்மக்கட் பேறு பெற்று, அன்பொடு விருந்தோம்பி, செய்ந்நன்றி யறிந்து, இனியன கூறி, நடுவிலைநின்று, அடக்கத்தோடு ஒழுக்கமும் கொண்டு, பொறுமையோடு அழுக்காறின்றிப் பிறர்பொருள் வெஃகாது, புறங்கூறாது, பயனில பேசிக் காலம் கழியாது, தீவினையஞ்சி, ஒப்புரவொழுகி, ஈகையால் புகழீட்டி வாழ்தல் வேண்டும். இந்நெறியில் மக்கள் வாழாராயின் நாடு நாடாகாது பாழாகும். "உண்டாலம்ம இவ்வுலகம்" என்னும் புறநானூற்றுச் செய்யுள் ஈண்டு கருதற் குறியது. இசையிலா யாக்கை பொறுத்த நிலம் வசையிலா வண்பயன் குன்றும். நாட்டின் வளம் குன்றின் நாடாளும் மன்னனை மாத்திரம் குறைகூறிப் பயனில்லை. நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நல்லற நெறியில் நின்றால்தான் நாட்டின் வளம் சிறக்கும்.

இங்ஙனம், அன்புநெறியில் வாழ்கின்ற ஆடவரும் மகளிரும் அருளுடையவராகிப் புலால் மறுத்துத் தவநெறியில் உயிர்க்குறுகண் செய்யா நெறிநின்று வாழ்தல் வேண்டும். இவ்வருள்நெறியைப் பின்பற்றுவோர் படிற்றொழுக்கமின்றி, வாய்மை பேசி, வெகுளாது, பிறர்க்கின்னா செய்யாது, கொலை மேற்கொள்ளாது வாழ்தல் வேண்டும். இந்நிலை உள்ளத்தில் எழவேண்டுமாயின் நிலையாமையை உணரவேண்டும். அப்பொழுதுதான் நம்பொருள் பிறர்க்குப் பயன்பட வேண்டும் எனக் கருதிப் பொருளைச் சேர்த்து வைக்காதிருக்கும் துறவுள்ளம் தோன்றும். அத்தகைய உள்ளத்திற்றான் எவ்வுயிரும் இறைவன் றன் சந்நிதியாகும் என்ற உண்மை ஞானம் தோன்றும். அம் மெய்ஞ்ஞானம் தோன்றின் அவாவறும். அதனால் பிறப்பறும். இப் பிறப்பறும் நிலையே தவத்தின் மேனிலையாம்.

இல்லற நெறியில் நிற்பவர்கள் காமம் சான்ற கடைக்கோள் காலை துறவறம் மேற்கொண்டு வாழ்வர்; வாழ்தல் வேண்டும் என்பதே திருவள்ளுவர் கருத்தென்பது அறத்துப்பால் வைப்பு முறையினால் "வையத்துள் வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என இல்லறத்தின் பயன் கூறிப் பின்னர் துறவறமும் அதன் பயனாகிய பிறப்பறுதலும் கூறுவதனால் நன்கு புலனாம். வானப்பிரஸ்தம் சந்நியாசம் இரண்டும் துறவுள்ளம் படைத்தார்க்கே யாதலின் இரண்டையும் தனித்தனியே பிரிக்காது துறவறமென்றே ஓதினார் வள்ளுவனார். "காமஞ் சான்ற கடைக்கோட் காலை, ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" என்பதனால் வானப்பிரஸ்தமும், "அருளொடு புணர்ந்த அகற்சி", "காமம் நீத்த பால்" என்பதனால் சந்நியாசமும் தொல்காப்பியர் கூறுவது உன்னுதற் குரியது. எத்தொடர்பும் இல்லாது விலகுதலே துறவு (சந்நியாசம் என்பது "இயல்பாகும் நோன்பிற் கொன்றின்மை" என்னும் குறளால் வலியுறும். நிலையாமை யுணர்ந்து நன்னெறி நின்று பற்றற்று அருளொடு வாழ்தலே துறவற நெறியாம் என்பது முந்தையோர் கண்ட முறை. அந்நெறியில் நின்றவர்களே முனிவர்கள், அத்தகையோரால் நாட்டிற்கு நலம் உண்டு என்பது நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்தான் நன்குவிளங்கும்.

# மதிப்புரை

கொங்கு நாட்டு வரலாறு:—ம. இராமச்சந்திரன் செட்டியார். விலை குறிக்கப்படவில்லை. கிடைக்குமிடம்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.

வரலாற்றுணர்ச்சி நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் வளர்க்கும் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்கவரெல்லாம் தத்தம் நாட்டுவரலாற்றைச் சீரிய முறையில் எழுதிவைக்க முயல்வது வெளிப்படை. சங்கங்கள் நிறுவித் தமிழ்வளர்த்தும் கடல்கடந்து வாணிபம் நடாத்தியும், நாடுகள் பல கடந்து தம் புலி வில் கயல் பொறித்தும் பெரும்புகழ் பெற்றுத் திகழ்ந்த நம் முன்னோர் வரலாற்றை வரன்முறையாக அறிவிக்கும் நூல்கள் இல்லாதொழிந்தது நமது தவக்குறையாகும். புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய தொகை நூல்களும், சிலப்பதிகாரம் முதலிய தொடர்நிலைச் செய்யுட்களும் ஆங்காங்கே காணப்படும் நாணயங்களும் புதையல்களும் பழங்கால நிலையை நாம் அறியச் செய்கின்றன. கல்வெட்டுக்கள் இடைக்காலந் தொட்டு அண்மைக் காலம்வரை நம்மவர் வாழ்ந்த தன்மையைக் காட்டி நிற்கின்றன. இவற்றையன்றிப் பழங்குடிகளின் வழித் தோன்றல்களாகிய நம்முடைய பழக்க வழக்கங்களும், தொடர் மொழிகளும் வரலாற்று நூல் செய்வாருக்குச் சிறந்த கருவிகளாக அமைந்திருக்கின்றன.

தமிழகத்தின் வரலாற்றை முழுவதுமாக அறிவிக்கும் நூல் எதுவும் இதுவரை தோன்றவில்லை. பல அறிஞர்களின் முயற்சியாலும், ஆராய்ச்சி வன்மையாலும் சோழர் வரலாறு சிறந்த முறையில் வெளிவந்து விட்டது. பாண்டியர் வரலாறும் ஒருவாறு நூல்வடிவில் வெளிவந்து விட்டது. சேரர் வரலாற்றைத் தனியே அறிவிக்கும் நூல் எழவில்லை. பல சிறு நூல்களிற் சேரர் வரலாறு ஒருவாறு ஆராயப்பட்டுள்ளது. தொண்டை நாட்டையோ கொங்குநாட்டையோ பற்றிய வரலாறுகள் தனித்தனியே இதுவரைதோன்றவில்லை. ஆசிரியர் ம. இராசச்சந்திரன்செட்டியார் இந் நூலெழுதி ஓரளவு அக் குறையை நிறைவு செய்து விட்டார்.

கொங்கு நாடு பண்டு தொட்டு ஒரு தனி நாடாகவே அமைந்துள்ளது என்ற கொள்கையை ஆசிரியர் பல இடங்களில் நிலை நாட்ட முயலுகின்றார். அது சேர நாட்டின் ஒரு பகுதியே என்று 'சேரன் செங்குட்டுவன்' 'சேரர் பேரூர்' முதலிய ஆராய்ச்சி நூல்களை இயற்றிய இராகவ ஐயங்காரும் பிறருங் கொண்டனர். அக்கொள்கையை மறுத்துத் தங்கோள் நிறுவச் செட்டியார் பல சான்றுகளைத் தருகின்றார். கொங்கு நாட்டின் இயற்கையமைப்பும்.

* மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்பவேண்டும்.

கொங்கு மக்களின் பழக்க வழக்கங்களும், சாதி முறையும் இன்றும் அவர் கொள்கைக்கு ஆதரவு தந்து நிற்பதாகக் கூறுகின்றார். எனினும் கொங்குநாடு என்றுவது தனி நாடாக இருந்திருக்குமா என்ற ஐயம் கற்போர் மனதை விட்டு நீங்குமாறு விளக்கப்படவில்லை.

கொங்கு நாட்டின் ஒவ்வொரு சிற்றூரும் பேரூரும் தரும் வரலாற்றுச் சிறப்புக்கள் அனைத்தும் ஆசிரியரால் நன்கு ஆராயப்பட்டுக் கையாளப் படுகின்றன. பற்பல இடங்களையும், மலைகள் நதிகள் முதலியவற்றையுங் கற்போர் நன்கு தெரிந்து மனத்தில் அமைத்துக் கொள்வதற்காகச் சிறந்த முறையில் அமைந்த நாட்டுப் படங்கள் (Maps) பல சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு தடவை நூலைக் கற்பதற்குள் கொங்கு நாட்டின் பல பிரிவுகளும் ஊர்களும் இயற்கை யமைப்பும், நமக்குப் பழக்கமாகி விடுகின்றன. பல பகுதிகளுக்கும் நேரிற்சென்று ஆராய்ந்தறிந்த உண்மையைக் கூறும் முயற்சியில் ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளார்.

கொங்கு நாட்டின் வரலாற்றுக் காலத்துக்கு முந்திய வரலாற்றை எழுதுங்கால் சங்க நூல்களை நன்கு பயன்படுத்தியிருக்கலாம். கொங்கு நாட்டின் எல்லைக்குள் பல இடங்களில் உரோமானியரின் நாணயங்களும் புதையல்களும் காணப்படுவதும், எகிப்து நாட்டுப் பிரமிடுகளில் எஃகுக் கருவிகள் காணப்படுவதும் 12000 ஆண்டுகளுக்கு முன்னமேயே கொங்கு நாடு சுய ஆட்சியுடன் அந்நியநாடுகளில் கப்பல் மூலம் வியாபாரம் செய்து வந்தது என்று கொள்ள ஆதாரமாகின்றன என்று ஆசிரியர் கருதுகின்றார்.

ஆராய்ச்சி வன்மையால் சங்க இலக்கியத்திற்கண்ட மோரியர், கோசர், என்பார் யாவர் என்று திட்டவட்டமாக இதுவரை முடிவுகட்டப்பட வில்லை. ஆசிரியரும் இவ் வாராய்ச்சியைத் தொடங்கி எதிர்கால ஆராய்ச்சி நிகழ்த்துவோர் முடிவுகட்டுமாறு விட்டுவிடுகின்றார்.

'கொங்கு தேச ராசாக்கள்' என்ற நூல் வரலாற்றுச் சிறப்புடையதன்று என்பது அறிஞர் பிலீற் (Fleet) முதலிய ஆராய்ச்சி அறிஞர் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த கருத்து. அது ஊசிமுறி போன்ற ஒரு நூலோ அன்றிக் கோளோற்பத்தி, கேரள மான்மியம் போன்ற ஒரு மகாத்மியமோ என்று கருதுவாரும் உளர். கொங்கு நாட்டு வரலாற்றை எழுதுவதற்கு ஆசிரியரால் இந் நூல் ஒரு சிறந்த கருவியாகக் கருதப்படுகிறது. சங்க காலத்திலும் அதற்கு அடுத்த காலத்திலும் இராட்டிரர்களுங் கங்கர்களும் தமிழ் நாட்டில் எந்தப் பகுதியை யேனும் ஆண்டிருக்கக் கூடுமோ என்றும், அக் காலத்தில் ஸ்கந்தபுரி என்று ஒரு சிறந்த நகர் இருந்திருக்குமோ என்றும், சதுர்ப்புய கன்னர தேவ சக்கரவர்த்தி உண்மையிலேயே நான்கு புயங்களுடன் பிறந்திருக்கக் கூடுமோ என்றும் கற்பார் மனதில் ஐயங்கள் தோன்றுமல் இல்லை.

இடைக் காலத்திலும், அண்மைக் காலத்திலும் கொங்கு நாட்டின் தன்மையை அறிவிக்கும் ஆதாரங்கள் பலவும் ஆசிரியரால் நன்கு ஆராயப்பட்டுச் சிறந்த முறையில் வரலாற்றில் அமைக்கப் படுகின்றன. பல்லவர், சோழர், பாண்டியர், சேரர் ஆட்சிக்குள் கொங்குநாடு அடங்கியிருந்த காலத்தும் அது தனி நாடாகவே அமைக்கப்பட்டு அரச உறவினரான அரசப் பிரதிநிதிகளாலும் அவர்கள் வாரிசுகளாலும் ஆளப்பட்டது என்பது ஆசிரியர் கொள்கை. எனினும் பேரரசாகத் திகழ்ந்த பல்லவர் முதலியோர் தம்நாட்டு வரலாற்றாற் கொங்கு மண்டிலத்தின் வரலாறு முழுவதும் பாதிக்கப்பட்டதை மறுப்பார் இலர். இடைக் காலக் கொங்குநாட்டு வரலாற்றை இந்நூலிற் கற்பார் அனைவரும் தமிழகத்தின் இடைக்கால வரலாற்றுச் சுருக்கத்தை ஒருவாறு கற்க வாய்ப்புக் கிடைக்கின்றது.

அண்மைக்கால வரலாறு, கற்பார் உள்ளத்தைக் கவரும் முறையில் பல ஆதாரங்களுடன் எழுதப்பட்டிருக்கின்றது. அண்மைக் காலத்தில் கொங்கு நாடு பலதுறைகளிலும் முன்னேறி யிருப்பதைக் கற்போர் அறிந்து மகிழ்வதுடன் தமிழகத்தின் தற்கால வரலாறு எழுதப்பட்டால் அது மக்களுக்கு ஊக்கமளிப்பதாக அமையும் என்ற முடிவையுந் தரும் முறையில் அமைந்துள்ளது.

தமிழக வரலாற்றின் எல்லைக் கற்களாக அமைந்து நிற்கும் சான்றுகள் பல இந் நூலாசிரியரால் எடுத்துக் காட்டப் பட்டிருப்பதும், மக்கள் இன ஆராய்ச்சி, குணநயம், பழக்கவழக்கங்கள் முதலியன பற்றிய அறிவு வரலாறு எழுதுவதற்குச் சிறந்த கருவியாக மேற்கொள்ளப் பட்டிருப்பதும் மேலும் வரலாற்றுத் துறையில் ஆராய்ச்சி நிகழ்த்துவாருக்குச் சிறந்த கருவிகளாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் இத்தகைய வரலாறு எழுதப் பட்டால் தமிழக வரலாறு செவ்வையாக எழுதப்படுவதற்கு அவை சிறந்த கருவிகளாக அமையும். அத்தகைய முயற்சியில் பிறரும் ஈடுபடுமாறு தூண்டுவதே போல் தமது அனுபவ முதிர்ச்சியாலும், ஆர்வத்தாலும், இந் நூல் எழுதி முடித்துத் தமிழகத்துக்குத் தந்த ஆசிரியர் ம. இராமச்சந்திரன் செட்டியாரைத் தமிழகம் போற்றக்கடமைப்பட்டுள்ளது.

இக் காலத்துக்கு வேண்டிய ஆராய்ச்சிகள் பலவற்றைத் தமிழில் வெளியிட்டு உதவி வருகின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எதிர்காலத் தமிழக வரலாற்றை முழுதும் அமைப்பதற்கு உறுப்பாக இந்நூலை வெளியிட்டதைப் பற்றிப் பொதுவாக ஆராய்ச்சி உலகமே யன்றிச் சிறப்பாகத் தமிழக முழுதும் நன்றி செலுத்தும் கடமைப்பட்டுள்ளது. புத்தக அமைப்பும் அச்சும் மிக நேர்த்தியாக அமைந்துள்ளன.

மோ. பொன்னையா, M. A.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்படும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனாநூல் (5) இனியதுநாற்பது (உரை) ... ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... .. ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை ... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா ... ... ... | 0 | 12 | 0 |
| 71. | துணைத்தலைவர் நினைவுமலர் ... ... ... | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4–8–0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. N Appan Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.